*1973 பிப்ரவரி 12]*

படுத்துவதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் 20-க்கு மேற்பட்ட தடவைகள் அந்தப் பகுதியில் ஓடுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரவு நேர பஸ்கள் விடுவதற்கு ஒரு ஆலோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று? அப்படி பஸ்கள் விடவில்லை என்று சொன்னால் துரிதமாக விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரவு நேரங்களில் ஓட்டுவதற்கான நிலைமையையும் ஒட்டித்தான் பயணத் தடவைகள் அதிகரித்திருக்கின்றன. இரவில் கூட திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு பஸ் வசதிக்காக ஏற்பாடு ஆகியிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு மின்னல்வேக பஸ் விடுவதாகக் கூறப்பட்டதே, அது நடைமுறையில் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர்கோவில் வழியாக கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் பஸ் விடுவது என்று கேரள மாநில போக்குவரத்து அமைச்சர் அவர்கள் என்னைச் சந்தித்துப் பேசிய பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நல்ல பஸ்கள் கிடைத்தவுடன் அதற்கான ஏற்பாடுகளை இரண்டு அரசும் மேற்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆந்திர அரசோடு ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 பஸ்கள் தமிழக அரசு விடுவதாக இருந்ததே, அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆந்திர அரசோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தப் பேருந்துகள் இப்பொழுது இரு மாநிலங்களிடையேயும் விடப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : ஆந்திர மாநிலத்தோடு செய்து கொண்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே நாஷனலைஸ் செய்த பஸ்கள் சில, நம்முடைய அரசு பேருந்துகள் ஓட்ட முடியாத சூழ்நிலையில் அவை புதுப்பிக்கப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. நெல்லூர், நாயுடுப்பேட்டை, வரதப்பாளையம் போன்ற

பகுதிகளில் பஸ்கள் நம்முடைய எல்லேயில் நிற்கின்றன. இவைகளே யெல்லாம் ஓட்டுவதற்கு, புதுப்பிக்கும் முயற்சியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரு மாநிலங்களுக்கு மிடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும்கூட, மாநிலங்களுக்கு இடையே ஓடும் வழித்தடங்கள் தனியார்களினுலும் பயன்படுத்தப்படுகின்றன. நம்முடைய சில வழித்தடங்களில் அத்தகைய தனி பஸ்கள் உரிமை யாளர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கின்ற காரணத் திஞல் சில வழித்தடங்களிலே நமது பஸ்கள் விடமுடியவில்லே. இதை ஒட்டித்தான் அண்மையில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சர்கள் மகாநாட்டில் மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற பேருந்துகளின் வழித்தடங்கள் அத்தனையையும் நமது போக்கு வரத்துக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான்கு தென் மாநில அமைச்சர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ் நாட்டு அரசிற்கும் கேரள சர்க்காருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடந்து புதிய ரூட்கள் திறக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கனவே கோட்டையம் போகிற பஸ்களே எர்ணுகுளத்திற்கு நீடிப்ப தற்கு ஏற்பாடாகியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஏற்கனவே தமிழகத் திற்கும் கேரளத்திற்கும் இருந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொரு வழித்தடத்தைப்பற்றி அவர்களிடையே பேசி அதற்குப் பிறகு விட வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அண்மையில் பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு மாநிலத்திலிருந்து இதர மாநிலத்தில் பேருந்துகள் எவ்வளவு தூரம் ஓடுகிறது என்ற அடிப்படையில். அந்தப் பகுதியிலே ஓடுகிற தூரத்தை சமநிலேக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தத்துவத்தை கேரள அரசு ஏற்றுக் கொண்டிருக் கிருர்கள். வழித்தடங்களே நாம் அதிகப்படுத்துவதில் எந்த விதமான சிக்கலும் இருப்பதற்கில்லே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனேயை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

*Road Development and Traffic Planning Committee*

* 140 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Road Development and Traffic Planning Committee, is working in collaboration